## ASSESSMENT FOR LEARNING

# கற்றலை மதிப்பிடுதல்

## UNIT - I BASICS OF ASSESSMENT

## அலகு - 1 மதிப்பிடலின் அடிப்படைகள்

**அளவிடல் - பொருள் :- (MEASUREMENT)**

பொருட்களின் புற இயல்புகளையும், மனிதனின் புறத்தோற்ற இயல்புகளோடு உள ஆற்றல்களையும் கணித்திட ”அளவிடுதல்” பயன்படுகிறது

**அளவிடலில் உள்ள மூன்று படிநிலைகள்**

- அளவிட வேண்டிய பண்பு கூறினைத் தீர்மானித்தல்
- மாறிலிகளை உணர தேவையான செயல் தொகுப்பைத் தீர்மானித்தல்
- தேவையான முறைகளை வகுத்தல்

**அளவிடல் - வரையறை :-**

“அளவிடல் என்பது எந்த ஒன்றின் அளவையும் பொருத்தமான அலகால் அளப்பதேயாகும்”

**-ராஸ்**

“அளவிடல் என்பது ஒரு பொருள் எத்தனை அதிகம் அல்லது எத்தனைகுறைவு என்பதை தீர்மானிக்கிறது. ஒரு நிகழ்ச்சிக்கு எந்த அளவு சரியான சின்னகளை வழங்க இயலுமோ அதனையே அளவிடல் என்கிறோம்”.

**- M.பிரோட் பீல்டு**

**கணித்தல்/ மதிப்பிடுதல்:- ( ASSESSMENT )**

ஒரு பொருள் அல்லது செயலின் தற்போதைய மதிப்பை, அளவிடுதல் மற்றும் சோதித்தறிதல் மூலம் நிர்ணயித்தலே கணித்தல் எனப்படுகிறது .




கற்றலை மதிப்பிடுதல் என்பது கற்பித்தலின் விலைபயன் ஆற்றலினை அளவிடுதல் ஆகும் .

**வரையறை :-**

‘மதிப்பிடுதல் ‘ என்பது உற்றுநோக்குதல், அளவிடுதல், சோதித்தறிதல் போன்ற வழிமுறைகளைப் பயன்படுத்தி, ஒரு பொருள் அல்லது செயலின் தற்போதைய நிலையை புறவயத்தன்மையுடன் புரிந்து கொள்ளுதல் ஆகும்.

**மதிப்பாய்வு /மதிப்பீடு :- ( EVALUATION)**

மதிப்பீடு என்பது ஒரு பொருளின் அல்லது செயலின் ஒட்டு மொத்த மதிப்பை தீர்மானித்தல் ஆகும்

**(எ .கா )** ஒரு மாணவனின் முழு ஆளுமையை சோதித்து அறிவது

**வரையறை:-**

மதிப்பீடு என்பது முறையாக ஆதாரங்களை சேகரித்தல் அவ்வாறு சேகரிக்கப்பட்ட ஆதாரங்களை சான்றுகளுடன் இணைத்து விவரித்தல் இறுதி நிலை கருத்தை உருவாக்கும் செயல்முறை போன்றவற்றை உள்ளடக்கியதாகும்.

- **DH ( 1970 )**

**கற்றலில் மதிப்பிடலின் பங்கு:- ( ROLE OF ASSESSMENT IN LEARNING )**

கற்றலில் மதிப்பிடல் மூன்று விதங்களில் பங்காற்றுகிறது அவை -

- கற்றலாகும் மதிப்பிடல் (AS LEARNING)
- கற்றலுக்காக மதிப்பிடல் (FOR LEARNING)
- கற்றலை மதிப்பிடல் (OF LEARNING)

**கற்றலாகும் மதிப்பிடல் :- (AS LEARNING )**

கற்றலாகும் மதிப்பிடலை, கற்றலுக்கான வழிமுறை எனலாம் அதாவது, கற்பவரின் நிலை, கற்கும் முறை, கற்றலில் செய்ய வேண்டிய மாற்றங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியது.

மேலும், மாணவர் தாமாகவே தம்மைப்பற்றியும், தம் கற்றல் பற்றியும் அறிந்து கொள்ள உதவுதல் 'அறிதலை அறிந்துணரும் வழிமுறை என்று அழைக்கப்படுகிறது'.

இத்தகைய முறையில் கற்றல் குறித்த சுய மதிப்பீடு மற்றும் சக மாணவர்களின் மதிப்பீடு முக்கிய பங்கு வகிக்கிறது. அதுவே ,மாணவர்கள் தமது தனித்த இலக்குகளை அடைய உதவி செய்கிறது.

**ஆசிரியரின் பங்கு :- மாணவர்**

- கற்றலின் விளைபயன்களை (LEARNING OUTCOMES) விவாதித்தால்
- தேர்ச்சி பெற்றிட வேண்டிய திறன்களுக்கான தகுதிப்பாடுகளை உருவாக்கிடல்
- கற்றல் குறித்த பின்னுட்டம் அளித்தல்
- சுய கண்காணிப்பு செய்திட வழிகாட்டு வினாக்களை கேட்டல்
- இலக்குகளை நிர்ணயிக்க வழிகாட்டுதல்

- எந்த பணியிலும் உயர் தரத்தை எய்திட சிறந்த மாதிரிகளை அளித்தல்

**கற்றலுக்காக மதிப்பிடல் :- (FOR LEARNING)**

- ❖ மதிப்பிடல் என்பது வளர்வறி மதிப்பீடு ஆகும்




**வளர்வறிமதிப்பீடு**

மதிப்பிடல் என்பது மாணவரது கற்றலை மேம்படுத்துவதற்கான செயல் என்று கூறலாம். இத்தகைய மதிப்பிடல், கற்பிப்புக் காலம் முழுவதும் அவ்வப்போது மேற்கொள்ளப்பட்டு மாணவருக்கும் ஆசிரியர்களுக்கும் கற்றலின் காணப்படும் நிறை குறை குறித்து தொடர் பின்னுட்டம் வழங்கிடுவதாக அமைந்திடும் மதிப்பிடலின் நோக்கம், மாணவரது தற்போதைய கற்றலை செம்மைப்படுத்துவதாகும் .

**ஆசிரியரின் பங்கு:-**

- கற்பிப்புக் காலம் முழுவதும் மதிப்பீட்டுச் செயல்கள் மேற்கொள்ளுதல்
- கற்றல் தேவை மற்றும் கற்றல் குறைபாடுகளை கண்டறிதல்
- கற்றல் மேப்பாட்டிற்கான பொருட்கள் மற்றும் வளங்களை தெரிவு செய்தல்
- பின் தங்கிய மாணவர்களுக்கு மாறுபட்ட கற்பித்தல் முறைகளைக் கையாளுதல்
- கற்றல் செயல் பாடுகளில் உடனுக்குடன் பின்னுட்டம் அளித்தல்

**கற்றலை மதிப்பிடல் :- ( OF LEARNING)**

‘ கற்றலை மதிப்பிடல்’ தொகுத்தறி மதிப்பீடு என்று அறியப்படுகிறது இது கற்றல் கற்பித்தல் காலத்தின் இறுதியில் கற்பிப்பு நோக்கங்கள் எந்தளவு ஏய்தப்பட்டுள்ளன என்பதனை அறியும் வகையில் மேற்கொள்ளப்படுவதாகும்.

**ஆசிரியரின் பங்கு:-**

- கற்பித்தல் கற்றல் செயல்பாட்டின் விளைவாய் மாணவர்களின் அடைவை மதிப்பீடு செய்து சான்றுகளின் அடிப்படையில் அறிவித்தல்
- எதிர்பார்க்கப்படும் கற்றல் விளைவுகளின் அடிப்படையில் மாணவர்களது கற்றல் தேர்ச்சியை சோதித்து அறிதல்
- கற்றல் தேர்ச்சியை அளவிட பல்வேறு சோதனை உத்திகளை பயன்படுத்துதல்
- மதிப்பெண்கள் வழங்குவதில் வெளிப்படைத்தன்மை அணுகுமுறையை பின்பற்றுதல்
- ஏற்க கூடிய தர அளவு நிலையை அடிப்படையாய்க் கொண்டு மாணவர்களை மதிப்பெண்கள் அடிப்படையில் தரவரிசைப்படுத்துதல்

**வளரறி மதிப்பீடு:- (FORMATIVE ASSESSMENT)**

வளரறி மதிப்பீடு என்பது, “ கற்பித்தலின் போது கற்றலில் ஏற்பட்டு வரும் முன்னேற்றத்தைக் கண்காணித்து மாணவருக்கும் ஆசிரியருக்கும் கற்றலில் ஏற்படும் வெற்றி தோல்வி குறித்து பின்னூட்டம் வழங்கிடுதல் ஆகும் .”

- **N.Eகிரான்லண்டு**

**வளரறி மதிப்பீட்டின் தன்மைகள் :- ( FEATURES/CHARACTERISTICS )**

1. கற்றல் கற்பிதலில் மாணவர் thokuthari முனேற்றம் தொடர்ந்து கண்காணித்திட மேற்கொள்ளப்படுகிறது
2. கற்றல் கற்பித்தல் நிகழ்வில் அவ்வப்போது பின்னூட்டம் அளித்து தவறுகளை சரி செய்ய உதவுகிறது
3. பாடத்தின் சிறு பகுதிகளை பாகுபாய்வு செய்து மதிப்பிட உதவுகிறது
4. இணக்கமான ஏற்புடைய கற்றல் கற்பித்தல் மாதிரிகளை வடிவமைக்க துணை புரிகிறது
5. கற்றல் கற்பித்தல் செயல்பாடுகளை மேம்படுத்த உதவுகிறது




**தொகுத்தறி மதிப்பீடு:-**

'கற்றல் - கற்பித்தல்' முடிவுற்ற நிலையில், மாணவரிடம் ஏற்பட்டுள்ள விரும்பத்தகு விளைபயன்களின் மொத்த அளவைக் கண்டறிதலே தொகுத்தறி மதிப்பீடாகும்.

**வையர்மேன் & S.G.கர்ஸ்**

**தொகுத்தறி மதிப்பீட்டின் தன்மைகள்:-**

- பகுப்பாய்வை மையமாகக் கொண்டது
- நன்பகத்தன்மை, ஏற்புடைமை உடையது
- அடைவுத் தேர்ச்சியின் அடிப்படையில் வகைப்படுத்துவது
- கற்றல் - கற்பித்தலின் ஒட்டு மொத்த திறனை அறிந்து கொள்ள உதவுவது
- இது மாறாக எதிர்வினை காட்டாத மதிப்பீட்டு முறையாகும்

**வளரறி  மதிப்பீட்ற்கும் தொகுத்தறி மதிப்பீட்டிற்கும் இடையே உள்ள வேறுபாடுகள்**

| வ எண் | வளரறி மதிப்பீடு | தொகுத்தறி மதிப்பீடு |
|---|---|---|
| 1 | வளரறி மதிப்பீட் டின் குறிக்கோள் கற்பித்தலைப் பயனுடையதாய் மாற்றுதல் சார்ந்தது | தொகுத்தறிவு மதிப்பீட்டின் குறிக்கோள் அடைவு நிலையை அளவிட்டு மதிப்பீடு செய்தல் சார்ந்தது |
| 2 | கற்பிப்பு காலத்தின் ஒவ்வொருநிலையிலும் மேற்கொள்ளப்படும் | ஆண்டு இறுதியில் மேற்கொள்ளப்படும் |
| 3 | இது குறையறிச் சோதனைக்கும் குறைதீர் கற்ப்பித்தலுக்கும் வழி கோலும் | இது மாணவர்களை தரம் பிரித்து தேர்ச்சி  வழங்க பயன்படும் |
| 4 | உடனுக்குடன் பின் தொடர் செயல்கள் மேற்கொள்ளப்பெறும் | அவ்வாறு செய்ய வாய்ப்புகள் இல்லை |
| 5 | கற்றல் -கற்பித்தல் செயல்பாட்டின் ஒருகிணைந்த பகுதியாகும் | இறுதி நிலையில் அமைந்துள்ள பகுதியாகும் |
| 6 | வலுவூட்டல் அளிக்கப்படுவதுண்டு | வலுவூட்டலுக்கு இடமில்லை |
| 7 | கற்பித்தலுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது | மதிப்பீட்டலுக்கு  முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது |

**மதிப்பீட்டலின் நோக்கங்கள்:-** ( PURPOSES OF ASSESSMENT )

- கற்றல் - கற்பித்தல் தரத்தினை பராமரிக்க மற்றும் அதனை உயர்த்திட மதிப்பிடல் பயன்படுகிறது
- மாணவர் தம் வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் குறித்து கண்டறிய வழி செய்கிறது
- மாணவர் குறைகளை கண்டறியவும் அதை களைவதற் கேற்ற வழிமுறைகளை பின்பற்றவும் ஆசிரியர்களுக்கு உதவுகிறது
- கற்றல் - கற்பித்தலில் தேவைப்படும் மாற்றங்களை கொண்டு வர வழி காட்டுகிறது
- மாணவர்களை கற்றல் தேர்ச்சி நிலைகளுக்குக்கேற்ப தரவரிசைப்படுத்த உதவுகிறது
- பள்ளிக்கும் சமூகத்திற்கும் இடையேயான தொடர்பினை மேம்படுத்துகிறது
- கல்வியியல் ஆராய்ச்சியாளர்களுக்கு புள்ளி விவரங்களுக்கு தர வழி வகை செய்கிறது